புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்ககால பாணர்களின் இறைவழிபாடு

ஈ.மகாலெட்சுமி என்ற பூபதி
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
பதிவு எண் 19121284022022
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
மேட்டமலை சாத்தூர்

## ஆய்வுச்சுருக்கம்

பண்டைத்தமிழ் மக்களின் உயர்ந்த நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்குவது சங்க இலக்கியங்களாகும். சங்ககாலம் எண்ணற்ற இனக்குழு மக்களால் நிறைந்தது. அதில் தொன்மை வாய்ந்த இனக்குழுவாக விளங்கியது பாணர்இனக்குழுவாகும். தங்கள் வாழ்நாளெல்லாம் கலைக்காகவே வாழ்ந்த கலைக்குழுவினர். பாணர்கள் தங்களுக்கென்று நிலைத்த மரபுகளைப் பின்பற்றினர். உணவு, உடை, நாகரிகம், பண்பாடு, இறைவழிபாடு போன்றவற்றில் சில மரபுகளைக் கையாண்டனர். செல்லும் இடமெல்லாம் இறைவனை வழிபட்ட பிறகே பரிசில் பெறச்சென்றனர். இசைக்கருவிகளில் இறைவன் உறைகின்றான் என நம்பினர். பாணர்களின் சிவன், திருமால், கொற்றவை மற்றும் இசைக்கருவிகளின் வழிபாட்டு மரபுகளை சங்க இலக்கியங்கள் வழி எடுத்தியம்புகிறது.

## முன்னுரை

கடவுளுணர்வும் கடவுள் நம்பிக்கையும் பழந்தமிழர் கொண்டிருந்தனர். இறைவழிபாடு என்பது மனிதன் விலங்கு நிலையில் இருந்து முன்னேறி மாந்தர்நிலையை எய்தி குழுவாகத் திரண்டு நின்ற போது மெல்லச் சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே வழிபாடு என்பதாகும். வழிபாடு தோன்றுவதற்கு அச்சம், அன்பு, நன்றியுணர்வு போன்றவை அடிப்படைக் காரணமாக அமைகின்றன. பழங்குடிகளான பாணர்களும் இறைநம்பிக்கை உடையவர்களாக விளங்கியுள்ளனர். இயற்கையையும், ஐந்திணைத் தெய்வங்களையும் வழிபட்டுள்ளனர். அவர்களின் இறை வழிபாட்டு முறைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுநெறிமுறைகள்

பாணர்களின் வாழ்வியல் நெறிகளை விளக்கிக் கூறுவதால் விளக்க முறை திறனாய்வு பின்பற்றப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களின் சமுதாய வாழ்க்கை முறைகளை ஆராய்வதால் சமுதாயவியல் அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

## இறைவாழிபாடு - விளக்கம்

மனிதனுடைய மனதில் தோன்றிய அச்சம், குற்ற உணர்வு போன்ற மனவியல் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டிற்கு வித்திட்டது. தொடக்கக்காலத்தில் பண்டைத் தமிழர்கள் ஞாயிறு, திங்கள், ஆறு, கடல், மலை, நெருப்பு போன்ற இயற்கையைத் தெய்வங்களாக வழிபட்டார்கள்.

“கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே”1
தொல்.புறத்திணையியல் நூ.எ 85

"வழிபாடு என்ற வேர்ச்சொல்லின்று பிறந்ததே வழிபாடு என்ற சொல்லாகும். இச்சொல் ஆழ்ந்த பொருளை உள்ளடக்கியது. வழிபாடு என்ற சொல்லிற்கு வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம், பூசனை என்ற பல்வேறு பொருள்கள் இருப்பதை அகராதிகள் காட்டுகின்றன. வழிபாடு என்பது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றது. இறைவனுக்குச் செய்யப்படும் வணக்க முறைகள் பொதுவாக வழிபாடு என்றே குறிக்கப்படுகின்றன."2

புதுவை மக்களின் திரௌபதி வழிபாடு - ப 18

பண்டைத் தமிழ்ச்சமூகம் ஐந்நிலமாகப் பகுக்கப்பட்டது. ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனியாக தெய்வங்கள் வழிபடப்பட்டன. இதனைத் தொல்காப்பியர் விளக்குகிறார். அவ்வகையில் மலையும் மலைசார்ந்த பகுதிக்கு முருகனையும், காடும்காடு சார்ந்த பகுதிக்கு மாயோனையும், வயல் சார்ந்த பகுதிக்குத் தெய்வமான இந்திரனையும், மணலும் மணல் சார்ந்த பகுதிக்கு வருனனையும் தெய்வமாக வழிபடுவதாகக் குறிப்பிடுகின்றார்.

சங்ககால பாண்மரபினரும் இறைநம்பிக்கை உள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். தான் செல்லும் இடமெங்கும் உள்ள எல்லா தெய்வங்களையும் தன் இனியயாழின் இசையால் பாடி, வணங்கி மன்னர்களை நாடிச் சென்றுள்ளனர். அரசனைப் பாடுவதற்கு முன்பாகவே கடவுளைப் பாடியுள்ளனர். இயற்கையை வழிபாடு செய்கின்றவர்களாகவும் விளங்கியுள்ளனர். குகைகளிலும் மரப்பொந்துகளிலும் வாழ்ந்து வந்த கற்கால மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வினை மேற்கொண்டிருந்தனர். இயற்கையின் ஆற்றலைக் கண்டு வியந்தனர். பயந்தனர். எனவே இயற்கையை இறைவனாகக் கருதி வணங்க முயன்றனர். பாணர்களும் அதைப் பின்பற்றினர்.

பாணர்கள் இறைவன்படைத்தஇயற்கையை வழிபடுகின்றவர்களாக விளங்கியுள்ளனர். நன்னன்சேய் நன்னனை வாழ்த்துவதற்கு முன்பாக கடவுளை வாழ்த்தியதாக கூத்தராற்றுப்படை பதிவு செய்துள்ளது.

கடவது அறிந்த இன்குரல் விறலியர்
தொன்று ஒழுகு மரபின் தம்இயல்பு வழாஅது
அருந்திறற் கடவுட் பழிச்சிற பின்னற

மலைபடுகடாம் பா.வ 536-539

புறநானூற்றில் விறலி முழுமதியை வணங்கியமையை,

செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்ற உலவு மதி கண்டு
சில்வளை விறலியும், யானும் வல் விரைந்து
தொழுதனெம்

புறம்பா 60 பா.வ 2-6

என்ற வரிகளால் புலனாகிறது.

சிவன் வழிபாடு

வேத இலக்கியத்திலே தொடக்ககட்டங்களிலே சிவன் ருத்ரன் என்றே அழைக்கப்பட்டார். தொல்காப்பியம் கூறும் திணைத் தெய்வங்களிலே முருகன், திருமால், வருணன், இந்திரன் ஆகியோர் முறையே குறிஞ்சி, முல்லை, மருதல், ஆகிய நிலங்களுக்குரிய தெய்வங்களாவர். கொற்றவை பாலை நிலத்தெய்வம். இவர்களில் முருகனும் கொற்றவையும் தவிர ஏனையோர் வேதங்களில் போறறப்பட்டுள்ள தெய்வங்கள். ஆனால் சிவபிரான் குறிப்பிட்ட நிலத்திற்குரிய தெய்வமாக கூறப்படவில்லை. சங்க நூல்களிலே சிவன் என்ற பெயர் வராவிடினும் சிவ பிரானுக்குரிய சில சிறப்பியல்புகளைப் பற்றிக் கூறுகின்றது. சிவபெருமானே எல்லா தெய்வங்களுடன் மிகவும் ஒன்றிணைந்த கடவுளாக விளங்குகின்றார்.

காண்பதற்கு அரியகடவுளை உயிர்களின் அகத்தும், உலகின் புறத்தும், ஒளியுருவில் வைத்து வணங்கும் வழிபாடு நம்நாட்டில் பன்னூறாண்டுகளாக நிலவி வருகின்றது. உலகின் புறத்தே ஒளிப்பிழம்பாகத் திகழும் ஞாயிற்றை இறைவன் திருமேனிகளுள் ஒன்றாகக் கொண்டு வழிபடும் வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். எல்லாம் வல்ல சிவபெருமான் நிலம், நீர், வளி, விசும்பு, ஞாயிறு, திங்கள், ஆன்மா என்னும் எண்பொருளையும் தனக்குரிய திருமேனியாகக் கொண்டு திகழ்தலின் அம்முதல்வனுக்கு அட்டமூர்த்தியென்னும் பெயர் வழங்குகிறது.

*சிவபெருமானைப் பற்றிய முக்கியமான கருத்துக்கள் வேறுசில பாடல்களிலும் வந்துள்ளன. அவர்பெரிதும் ஆராயப்பட்ட நீண்ட திருச்சடையினை உடையவர். ஆதிமுதல்வர், நான்மறைகளும் அவரின் திருநாவில் என்றும் உள்ளன. அறம் ஒன்றையே மேவிய நான்கு பகுதிகளையுடையதாய் ஆறு அங்கங்களாலும் உணரப்பட்ட ஒப்பற்ற பழைய நூல் வேதமாகும் என்பதை*

*நன்று ஆய்ந்த, நீள் நிமிர்சடை*
*முது முதல்வன் வாய் போகாது*
*ஒன்று புரிந்த ஈர்- இரண்டில்*
*ஆறு உணர்ந்த ஒரு முது நூல்*

*மேலதுபா 166 பா.வ 1-4*

*என ஆவூர்கிழார் சிறப்பித்துப் பாடியுள்ளார். அண்மைக்காலத்தில் கிடைத்துள்ள சில நாணயங்கள் சங்க நூல்கள் சிவபிரானை பற்றிக் கூறியுள்ள சில கருத்துக்களை உறுதிப்படுத்தி புதியஒளி பாய்ச்சியுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். பாண்டியனின் நாணயங்கள் சிலவற்றிலே அஷ்டமங்கலச் சின்னங்கள் உள்ளன. இவை சமயச்சார்பானவை. இவற்றை விட நிற்கின்ற யானை பொறிக்கப்பட்டுள்ள காசுகள் சிலவற்றிலே அதற்கு முன் திரிசூலம் உள்ளது. அதன் தண்டத்திலே பெரிய மழுவாள் உள்ளது. இடையில் ஒரு கொடி உள்ளது. திரிசூலமும் சிவபிரானின் படைக்கலங்கள். இது போன்ற திரிசூலம் மேலும் சில பாண்டியர் காசுகளிலும் காணப்படுகின்றது. இத்தகைய சிறப்புகளை உடைய சிவபிரானை பாண் சமூகத்தார் வணங்கிச் சென்றுள்ளனர். நவிரமலையில் ஆட்சிசெய்யும் நன்னன்சேய் நன்னைனக் காணச்செல்லும் போது காரியுண்டிக்கடவுளை வழிபட்டுச் சென்றுள்ளனர். சங்க காலத்தில் நன்னன்சேய் நன்னன் என்ற குறுநில மன்னரின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பில் அமைந்திருந்ததும், இக்காலத்தில் வடஆற்காடு மாவட்டத்தில் திரிசூலகிரி என்னும் பெயருடன் விளங்குவதும் ஆகிய பெரும்புகழ் வாய்ந்த நவிரமலையின் உச்சியிலே காரியுண்டிக் கடவுளாகிய சிவபெருமானுக்குச் சிறப்புடைய கோயில் அமைந்துள்ளது என்பதை பெருங்குன்றூரப் பெருங்கௌசிகனார் என்னும் புலவர் குறிப்பிடுகின்றார்.*

*பேரிசை நவிரம் மேஎயுறையும்*
*காரியுண்டிக் கடவுள தியற்கையும்*

*மலைபடுகடாம் பா.வ 81-82*

*என்னும்அடிகள் இசைமரபு குன்றாமல் பாணர்கள்பாடி வணங்கிச் சென்றதாகக் குறிப்பிடுகிறது.*

*திருமால் வழிபாடு*

*முல்லைநிலமக்கள் திருமாலைக் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டனர். திருமாலைப் பற்றிக் கூறப்படும் வரலாறுகளை நோக்குமிடத்து அவை கண்ணன் வழிபாடே என்று நன்கு விளங்குகின்றது. இவ்வழிபாடு பாரதப் போருக்குப் பின் வந்தது என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். முல்லை நிலமக்கள் திருமாலுக்குப் பாற்சோறு பொங்கிப் படைப்பர். ஆயர் வேய்ங்குழலூத ஆய்ச்சியர் மாயன் புகழ்பாடிக் குரவையாடுவர். பரிபாடலில் கண்ணனும், கண்ணரின் மூத்தோன் பலதேவனும் ஒருவராக வைத்து போற்றப்படுகின்றனர். பாண்கலைஞர்கள் திருவெஃகாவில் பள்ளி கொண்டுள்ள திருமாலை வணங்கிச் சென்றுள்ளனர். திருவெஃகா என்பது காஞ்சியில் உள்ள திருமால்திருப்பதி ஆகும். அந்நாட்களில் சமஸ்கிருத நாகரிகத்தின் தென் கோடி எல்லை காஞ்சிபுரம். ‘காஞ்சீபுர’ என்பது ஒரு சமஸ்கிருதச்சொல். அந்நகர் தமிழ்நாட்டில் இடம் பெற்றிருந்தாலும் அதற்குத் தமிழ்ப்பெயர் இல்லை. கச்சி என்ற பெயர் கிபி ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இளந்திரையன் புகழ்பாடும் பெரும்பாணாற்றுப்படையில் இடம் பெற்றுள்ளது. இத்தலத்தில்தான் திருவெஃகா அமைந்துள்ளது. இது திருமாலின் நூற்றெட்டுத் திருப்பதிகளுள் இதுவும் ஒன்றாகும். இத்திருப்பதியில் திருமால் அரவணையிற் பள்ளிகொண்ட கோலத்தோடு எழுந்தருளியுள்ளார். திருமால் சக்கரத்துடன் வலம்புரிச்சங்கினைத் தாங்கும் பெரிய திருக்கரங்களை உடையவர் என்று முல்லைப்பாட்டில் வருணிக்கப்படுகிறார். மேலும் தம்முடைய மார்பிலே திருமகளை வைத்திருப்பவர் எனவும், மாவுலி வார்த்த நீர்தன் கையிலே சென்றதால் உயர்ந்து விளங்குபவர் எனவும் வருணிக்கப்படுகிறார். இத்தகைய சிறப்புகளை உடைய திருமாலை பாணர்கள் வாழ்த்தி வணங்கி சென்றதை*

*அருந்திறற் கடவுள் வாழ்த்தி, சிறிதுநும்*
*கருங்கோட்டு இன்இயம் இயக்கினீர்கழிமின்*
*பெரும்பாணாற்றுப்படை பா.வ 391-392*

*என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன..*

*கொற்றவை வழிபாடு*

*பாணர்கள் பாலைநிலத்தின் வழியாகக் கடந்து செல்லும் போது பாலைநிலத் தெய்வமான கொற்றவையையும் வழிபட்டுச் சென்றுள்ளனர்.*

*பெண் தெய்வங்கள் பற்றி சிலகுறிப்புகள் தமிழ் இலக்கணநூலில் இருப்பதைச் சில சான்றுகள் விளக்குகிறது. தமிழர்கள் தாங்கள் வாழ்ந்து வந்த நிலத்தை ஐந்து வகையாகப் பகுத்து அதனைத் தெய்வத்தோடு தொடர்புபடுத்தி இருப்பது தெய்வத்தின் மேல் உள்ள ஈடுபாட்டைக் காட்டுவதாகும்.*

*தன்னை எட்டி உதைக்கும் குழந்தையை எடுத்து அணைக்கின்ற தன்மை தாய் ஒருத்திக்கு உள்ளது என தெளிந்த மக்கள் தம்மை வறட்சியினின்றும் நோயினின்றும் காக்கக் கூடியவளும் அவளே என எண்ணிக் கொற்றவையைத் தெய்வமாகக் கொண்டனர்.*

*மற்றவர்கள் தம் வெற்றிக்குத் துணை செய்த பெண்தெய்வமான கொற்றவையை வணங்குவதும் அத்தெய்வத்தைப் புகழ்ந்து வாழ்த்தி வணங்கும் விழாவிற்கு கொற்றவைநிலை என்று பெயரிட்டிருப்பதும் தொல்காப்பியத்தால் உணரப் பெறுகின்றன.*

*மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த*
*கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே*
*தொல்.புறத்திணையியல் நு.எ 62*

*மேலும் புறம்பொருள்வெண்பாமாலையில் கொற்றவைநிலை பற்றி வரும் அடியாவது*

*“நீள்தோளான் வென்றிகொள்க என*
*நிறைமண்டைவலன் உயரிக்*
*கூடாரைப் புறம் காணும்*
*கொற்றவைநிலை உரைத்தன்று”3*
*புறப்பொருள் வெண்பாமாலை நூ.எ 40*

*இதன்மூலம் பண்டைத்தமிழர் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கி, வாழ்த்தி விழா செய்து வழிபட்டனர் என்பதை அறியலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் பெண் தெய்வங்கள் பற்றியும் வழிபாடு பற்றியும் பல செய்திகள் விரவிக்கிடக்கின்றன. கொற்றவை, காளி, பழையோள் போன்ற பெண் தெய்வங்களை வழிபட்டுள்ளனர்.*

*திருமுருகாற்றுப்படையில் முருகனின் தாயாக மலைமகளும், கொற்றவையும்,பழையோளும் கூறப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.*

*தொல்காப்பியர் மாயோன்மேய காடுறை உலகமும் என்று கூறி இருப்பதால் மாயோனுக்கு முன்னரே காடுறைக்கடவுளாகப் பெண்தெய்வம் இருந்தது என்பதை அகநானூறு விளக்குகின்றது. பழந்தமிழ் நூலான தொல்காப்பியத்தில் கொற்றவையை பாலை நிலத் தெய்வமாகக் குறிப்பிடாமல் போர்நிலைகளில் ஒன்றனுக்கு கொற்றவைநிலை என்று பெயரிடுகின்றார். மேலும் கொற்றவைக்கு பழையோள் என்ற பெயரும்; வேறுபெயரும் உண்டு. எனவே இத்தெய்வத்தைத் தாயாகக் கருதி வழிபடும் வழக்கம் மிகப் பழமையானது என்பது தெளிவாகிறது.*

*கொற்றவை மேலும் பலபெயர்களை கொண்டுள்ளாள் என்பதை நிகண்டுகள் வழி அறிய முடிகிறது. சான்றாக பிங்கலநிகண்டு என்ற இலக்கணநூல் மோடி, காரியதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி, மூதணங்கு என்று சுட்டுகிறது. மேலும் சூடாமணிநிகண்டு மூதணங்கு, மோடி, கொற்றி, சூரி, வடுகி, மாரிஎன்ற பல பெயர்களைக் கூறுகின்றது. பொருநராற்றுப்படை கொற்றவையைக் காடுறைக்கடவுள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு காளி, கூளி என்பது பொருளாகும். இக்கொற்றவையைக் காட்டுவழியில் செல்கின்ற பாணர் பாடினியுடன் யாழிசைத்துப் பாடிச் சென்றுள்ளனர் என்பதை*

*வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கில்*
*காடுஉறை கடவுட்கடன் கழிப்பிய பின்னற*
*பொருநராற்றுப்படை பா.வ 91-92 என்ற அடிகள் விளக்குகின்றது.*

இசைக்கருவிகள் வழிபாடு

பாணர்கள் அந்தந்த நிலங்களில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கிச் சென்றதோடு மட்டுமல்லாமல் தங்கள் வாழ்விற்கு ஆதாரமாக விளங்கிய இசைக்கருவிகளையும் வணங்கி, அதற்குச் செய்ய வேண்டிய மரபுகளைச் செய்த பின்னரே அதை இசைத்துள்ளனர். மரபு வழிப்பாணருக்குக் கிடைத்த யாழ் மரபுவழிக் கருவியாகும். வழிவழி வந்த கருவியாதலால் வழிபடத்தக்கதாய் மாறியது. தம் கடமை புரிவதற்குக் குடிமையின்படிக் கிடைத்த கொடையாக அது இருந்தது. அதனாலேயே அது கடனறியாழ், கையது கடனிறையாழே எனப்பட்டது. தாம் வழிபடுகின்ற யாழை வைத்தே சூள் உரைத்தனர். கலை வாழ்வை மையமாகக் கொண்ட பாண் சமூகத்தாரின் மரபினை கடனறி மரபே என இலக்கியங்கள் போற்றுகின்றன. கடன் என்பதற்கு கடமை, கடப்பாடு எனும் பொருள்கள் உண்டு. ஒவ்வொரு சமூகத்தாருக்குமான பிறவிக் கடப்பாடு மரபுவழி வந்த காலம் ஒன்றுண்டு. பண்பாடென்பது கற்றுக்கொள்ளப்பட்டது. மற்றவரிடமிருந்து பகிர்ந்து கொள்ளப்பட்டது. அதனாலேயே கற்றுக்கொண்டதை, பகிர்ந்து கொண்டதை மற்றவர்க்குக் கற்பிக்க வேண்டும். பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதும் மரபாகப் பேணப்பட்டது. கற்றதைக் கடைபிடித்தலும் மரபாகும். இது சங்ககாலத்தில் கோள் எனப்பட்டது. அதாவது கொள்ளுதல் என்பதாகும். இதனால்தான் பயில்வோரை கோளாளர் என்றனர். கொடுப்போர் கொடுப்பவை உளங்கொளல் என்பதே மரபு. இம்மரபை அடிப்படையாகக் கொண்ட பாணர்கள் கோள்வல் பாண்மகன் எனப்பட்டனர். பாணர்கள் தாம் கற்றுக்கொண்ட இசையை மரபுவழியாகப் பின்பற்றி வந்தனர். மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்தனர்.

கடனறிமரபில் காலந்தோறும் தங்கள் கலைத்திறமையை மெருகேற்றினர். தங்கள் கலைத்தொழிலில் மேன்மேலும் திறன் பெற்றனர். திறம்பட இசைக்கும் திறனால் பல பெயர்களைப் பெற்றனர். தம் இசைப்புலமையால் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றனர். சிறுபாணர் முறைமையறிந்து யாழை இசைத்தனர். கோள்வல் பாணர் கலைகள் பல கற்றவர்கள். இதனால் இவர்கள் துறைபல முற்றிய பைதீர்பாணர் எனப்பட்டனர். நல்லதை எண்ணி நயம்பட விரும்பும் வகையில் இவர்கள் பாடுவதால் நன்மை நிறைந்த நயவரு எனப்பட்டனர். இவ்வாறு குடிவழியில் பழம்புகழ் பெற்ற பாணர்தம் திறத்தால் ஈட்டிய புதிய தகுதியையம் இணைத்து புதுப்புகழ் உடையவராக மாறினார். வாழ்வின் நீண்ட நெடிய அனுபவங்களால் அறிவிற் சிறந்தோராகப் பாணர்கள் பலர்bஉருவானார்கள். அவர்களில் ஆண் பாணர் முதுக்கு உறைஞர் என்றும் பெண் பாணர் முதுக்கு உறைவி எனவும் பெயர் பெற்றனர். மேலும் சான்றோர்களால் முதுவாய்ப்பாணன் எனவும் முதுவாய் இரவலன் எனவும் பெயர் பெற்றனர்.

தங்கள் வாழ்வாதாரமான யாழிற்கு வழிபாடு செய்த பின்னரே இசைத்தனர். யாழை மணமகள் போல் அலங்காரம் செய்து வழிபட்டனர். அதேபோல் முரசிற்கும் வழிபாடு செய்தனர். முரசை நன்கு கழுவி சுத்தம் செய்து குருதிப்பலி கொடுத்து வணங்கினர். இதனை பதிற்றுப்பத்து தெளிவுபடுத்துகிறது. தெய்வத்தினை வழிபடாது செல்லும்போது உணவு பெறுவதில் தாழ்ச்சி ஏற்படும் என்று பாணர்கள் நம்பினர்.

முடிவுரை

பாணர்கள் இறை நம்பிக்கை உடையவர்களாக விளங்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. பாணர்கள் மன்னர்களை வணங்குவதற்கு முன் இயற்கையை வணங்கியுள்ளனர். நன்னன்சேய் நன்னன் நாட்டில் உள்ள நவிர மலையில் வீற்றிருக்கும் காரியுண்டிக் கடவுளான சிவனை வழிபட்டுள்ளனர். முல்லை நிலமக்களின் இறைவன் திருமால். பாணர்களும் திருவெஃகாவில் பள்ளி கொண்டுள்ள, பாம்பு பஞ்சணையின் மேல்படுத்துக் கொண்டிருக்கின்ற திருமாலை வழிபட்டுள்ளனர் என்பது புலனாகிறது. பாலை நில வழியாக கடந்து செல்லும் போது பாலை நிலத்தின் காக்கும் தெய்வமான கொற்றவையை வழிபட்டுள்ளனர். பாணர்களின் தங்கள் வாழ்வின் ஆதாரமான இசைக் கருவிகளையும் வணங்கிச் சென்றுள்ளனர் என்பது புலனாகிறது. யாழை மணப்பெண் போல் அலங்கரித்து வழிபாடு செய்துள்ளனர். முரசை அலங்கரித்து குருதிப்பலி கொடுத்து வழிபட்டுள்ளனர் என்பது புலனாகிறது.

துணைநூற்பட்டியல்

1. சுபாஷ்சந்திரபோஸ்.ச — *தொல்காப்பியம்பொருளதிகாரம், இயல்வெளியீடு, தஞ்சாவூர் – 2016.*

2. வீரப்பன். உலக — *புதுவைமக்களும்திரௌபதிவழிபாடும், சேதுநூலகம், புதுச்சேரி – 2001.*

3. திருஞானசம்பந்தர். ச — *புறப்பொருள்வெண்பாமாலை, கதிர்பதிப்பகம், திருவையாறு - 2006*

********* ********* ********** ********* ********* ********** ********** **********